**மறைந்த வாடிக்கையாளர்களின் சொத்துக்களை அவர்களின் சட்டபூர்வ வாரிசுதாரர் மற்றும் கேட்போருக்கு விடுவித்தல்**

DBOD.BC.No .63/09.07.007/2001-02 பிப்ரவரி 04, 2002

அனைத்து வணிக வங்கிகளுக்கும்
(பிராந்திய கிராம வங்கிகள் நீங்கலாக)

அன்புள்ள ஐயா

**மறைந்த வாடிக்கையாளின் சொத்துக்களை அவர்களின்**
**சட்டபூர்வ வாரிசுதாரர் மற்றும் கேட்போருக்கு விடுவித்தல்**

மேற்கண்ட தலைப்பில் ஜனவரி 1, 2002ம் ஆண்டில் வெளியான சுற்றறிக்கை DBOD.BC.No.எண் 55/09.07.007/2001-02ஐ பார்வையிடும்படி கேட்டுக்கொள்திறோம். இதன் தொடர்பாக கீழ்க்கண்டவாறு சுற்றறிக்கையில் மாற்றங்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(i) பத்தி 1
"இறந்த வைப்புத்தொகைதாரரின் பற்றுத்தொகை ரூ25,000க்கு மேற்படக்கூடாது" என்பதற்கு பதிலாக "இறந்த வைப்புத்தொகைதாரரின்) பற்றுத்தொகையாக எந்த தொகையாக இருந்தாலும்" என்று இருக்க வேண்டும்.

(ii) பத்தி 3
சுற்றறிக்கையில் பத்தி மூன்றில் மூன்றாவது வரியில் இறந்த வாடிக்கையாளர் மற்றும் உட்படுத்தும் என்ற வார்த்தைகளுக்கிடையே எந்த தொகையாக இருந்தாலும் என்ற வார்த்தைகள் புகுத்தப்படவேண்டும்.

2. இவ்வாறாக, மேற்கண்ட சுற்றறிக்கை குறிப்பிட்டுள்ளபடி தகுந்த பாதுகாப்பு உத்திகளுடன் இறந்த வாடிக்கையாளரின் மற்ற சொத்துக்கள் எத்தகைய மதிப்பைப் பெற்றிருந்தாலும் விடுவிக்கப்படலாம்.

3. தயவு செய்து பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கவும்.

உங்கள் நம்பிக்கைக்குரிய

சி.கே.என்.ரூபானி
உதவி பொது மேலாளர்